**கவனிக்க.-** 2015.05.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.-** இம்முறை வெளியாகும் வர்த்தமானப் பத்திரிகை பகுதி V இல் 2012 ஆம் ஆண்டு யூன் முதல் செத்தெம்பர் வரையான காலாண்டிற்கான அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ள புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் வெளியிடப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1917 - 2015 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2015.05.29

*1917 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 716 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 717 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 720 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக் கோரல்

*கட்டுநாயக்கவிலிருந்து (4/520) குரண-கொழும்பு முடிவிற்கான புகையிரதப் பாதை இணையும் இடம் (Top Points) (6/860) வரை மற்றும் குரண-நீர்கொழும்பு முடிவிற்கான புகையிரதப் பாதை இணையும் (Top Points) (7/280) இடத்திலிருந்து கல்கந்த புகையிரதக் கடவை வீதி (8/ 400) வரையான இரட்டை புகையிரத வீதியை (3.46 கி. மீ.) அமைத்தல்*

கேள்வி இலக்கம் : SRS/F.7226

இலங்கைப் புகையிரத சேவையின் திணைக்கள வழங்கல் குழுவின் (பிரதான) தலைவரினால் கட்டுநாயக்கவிலிருந்து (4/520) குரண-கொழும்பு முடிவிற்கான புகையிரதப் பாதை இணையும் இடம் (Top Points) வரை மற்றும் குரண-நீர்கொழும்பு முடிவிற்கான புகையிரதப் பாதை இணையும் (Top Points) இடத்திலிருந்து கல்கந்த புகையிரத குறுக்கு வீதி (8/400) வரையான இரட்டை புகையிரத வீதி (3.46 கி. மீ.) வரையான பகுதியில் மண் நீக்குதல், நிரப்புதல் மற்றும் அதற்கொப்பான பணிகள், ABC மேற்படையில் இடுதல் மற்றும் Ballasts Layer இடுவதற்காக முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுவதுடன் அவை 2015.06.11 ஆந் திகதி பி. ப. 2.00 மணிவரை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2015.06.10 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரையான காலப்பகுதியினுள் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தையிலுள்ள புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர் அலுவலகத்தில் மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமான ரூபா மூவாயிரம் (ரூ. 3,000) செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனு விண்ணப்பப்பத்திரத்தின் மூலம் மனுக்களைச் சமர்ப்பிக்க முடியும்.

2. விலைமனு ஆவணங்களை இலங்கை தேசிய கட்டுமான ஒப்பந்த சங்கத்தின் (NCCASL) உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். நெடுஞ்சாலை கட்டுமானம், நீர்ப்பாசன மற்றும் காணி கட்டமைப்பு தொடர்பான துறையில் C4 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தின்கீழ் ICTAD நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தையிலுள்ள புகையிரத களஞ்சியசாலை அதிகாரசபை அலுவலகத்தில் கட்டணமின்றி விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்க முடியும்.

4. விலைமனுக்கள் முடிக்கப்படும் தினத்திலிருந்து குறைந்தபட்சம் 120 நாட்கள் வரை மனுக்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

5. விலைமனுக்களுடன் 8,50,000 ரூபா (எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா) காப்புறுதிப் பிணைத்தொகை இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் மற்றும் நேரத்திற்கு முன்னதாக "தலைவர், திணைக்கள வழங்கல் குழு (பிரதான), இலங்கை புகையிரத சேவைகள், பிரதான அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் கையளிக்க வேண்டும்.

7. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தையிலுள்ள புகையிரத களஞ்சியசாலை அதிகார சபை அத்தியட்சகர் அலுவலகத்தின் திணைக்கள வழங்கல் குழு (பிரதான) அலுவலகத்தில் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு பிரசன்னமாயிருக்க முடியும்.

8. மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள தொலைபேசி இலக்கம் 2438078 அல்லது 2436818 ; தொலைநகல் இலக்கம் 2432044 ; மின்னஞ்சல் srs.slr@gmail.com அல்லது www.slrail.info இணையத்தளம் ஊடாக புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரை தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
திணைக்கள வழங்கல் குழு (பிரதான),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீடு இல. SRS/F.7226

5-794

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி மாவட்டத்தில், இல. 861, மேல்சேனை, நீரெல்லை, அக்குரணை எனும் முகவரியில் வசிக்கும் முஹம்மத் உவைஸ் பாத்திமா பஸ்மிலா (தே. அ. அ. இல. 857261763V) ஆகிய நான், இல. 861, மேல்சேனை, நீரெல்லை, அக்குரணை எனும் முகவரியில் வசிக்கும் நூஹ் சுலைமான் முஹம்மத் உவைஸ் (தே. அ. அ. இல. 520232982V) என்பவருக்கு கண்டியில் வசிக்கும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய எம். எப். எம். அஸ்மி என்பவரால் 2007.08.23 ஆந் திகதி உறுதி செய்து வழங்கப்பட்ட 2895 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தை 2015.04.11 ஆந் திகதி முதல் இரத்துச்செய்யப்பட்டு செல்லுபடியற்ற தாக்கி உள்ளேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

முஹம்மத் உவைஸ் பாத்திமா பஸ்மிலா.

5-660

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பி பீ பீ எல் என்டர்பிரைசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 105286
பதிவு முகவரி : மட்டம் 3, பார்க்வே கட்டிடம், இல. 48, பார்க் வீதி, கொழும்பு 2

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
-பீவீ 5958.

5-648

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டுநாயக்க நெல் ஆலை வீதி, 687/சீ எனும் முகவரியில் வதியும் தென்னக்கோன் முதியான்சலாகே லலிதா பிரியதர்ஷனி ஆகிய என்னால், நீர்கொழும்பு சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு திரு. பிலீஷியன் பெர்னாண்டோ புள்ளே என்பவரால் 2008.05.16 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11322 ஆம் இலக்கமுடையதும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டுநாயக்க நெல் ஆலை வீதி, 687/சீ எனும் முகவரியில் வதியும் ஹேரத் முதியான்சேலாகே நிலம்மா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் வெறிதாக்கப்பட்டு இரத்துச்செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களும் மற்றும் அனைவரும் அறிந்துகொள்வார்களாக. இந்த அற்றோணித் தத்துவத்தில் பெயர் குறிக்கப்பட்ட அற்றோணித் தத்துவக்காரரினால் இத்திகதிக்குப் பின்னர் எனது சார்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை அனைவரும் அறிந்துகொள்வார்களாக.

தென்னக்கோன் முதியான்சலாகே லலிதா பிரியதர்ஷனி.

5-685

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, 729 ஆம் இலக்கமுடைய 1971.02.19 ஆந் திகதியிடப்பட்டு அ. ம. மொ. தாசிம் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு முகதாவில் இல. 12, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு 6 ஐச் சேர்ந்த அப்துல் சமீன் மொகமட் இஸ்பஹானி என்பவரின் பெயரில் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு 6, 36 ஆவது ஒழுங்கை, இல. 12 ஐச் சேர்ந்த அப்துல் ரசீட் அப்துல் சமீன் ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2015.05.13 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் மேற்கூறப்பட்ட அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப் படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

அப்துல் ரசீட் அப்துல் சமீன்.

5-745

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

காலி, மினுவங்கொட, ஸ்ரீ குணரத்ன மாவத்தை, இலக்கம் 10, "கேதுமதி" இல் வசிக்கும் லங்கேஷ்வர அநுருத்த அதபத்து புஸ்ஸவெல (தே. ஆ. அ. அ. இல. 771381162V) ஆகிய நான், காலி பிரசித்த நொத்தாரிசு கோபிகா ப்ரியரன்ஜிகா மிரிஸ்ஸ லொகுகே என்பவரால் 2009.08.03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 1581 எனும் அற்றோணி அதிகாரத்தின் மூலம் காலி, ஹிக்கடுவ, நாலாகஸ் தெனிய, ஸ்ரீ ஸோரத மாவத்தையில் வசிக்கும் விஜேதுங்க படபெந்திகே ஸமன் (தே. ஆ. அ. அ. இல. 440692265V) என்பவருக்கு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் இத்தால் இரத்துச்செய்து வெற்றும் வறிதானதுமாக்குகின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

லங்கேஷ்வர அநுருத்த அதபத்து புஸ்ஸவெல.

5-782

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

எல்பிட்டி, குறுந்துகஹஹெதெப்ம, தானாயம் கந்த வீதியில் வசிக்கும் வீரசிறி நாராயண கிறிசாந்த பிரதீப் குமார ஆகிய நான், 2012.08.26 ஆந் திகதி காலி நீதாசன வலய பிரசித்த நொத்தாரிசு எஸ். பத்திரண அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 1459 கொண்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தால் எல்பிட்டி, குறுந்துகஹஹெதெப்ம, தலாவ வீதி, இல. 485 இல் வதியும் பெடி அறம்பகே சமரபால என்றழைக்கப்படும் பெடி அறம்பகே மஹிந்த என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச்செய்யப்படுகிறதென்பதை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகிறேன். இதன் பிறகு மேற்படி அற்றோணித் தத்துவப்பத்திரத்தினால் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் எனவும், மேலும் அறியத்தருகின்றேன்.

வீரசிறி நாராயண கிறிசாந்த பிரதீப் குமார.

5-708

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : வேர்ல்ட் ட்ரவெல் லின்க் ஃபிலைட் க்ரு (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 105251
கூட்டிணைப்புத் திகதி : 2015.04.24
பதிவு முகவரி : இல. 195, அம்பாறை வீதி, அக்கரைப்பற்று 21

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-777

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2015.04.16 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நியூ சில்க் றோட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 105119
பதிவு முகவரி : இல. 102, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5-780

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி பதிவுசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ரஜூன் மெட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 104619
பதிவுசெய்யப்பட்ட திகதி : 2015.03.20
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 48, 27 ஆம் சந்து, கொழும்பு 3

சீ. வீ. கே. பெரியப்பெரும,
நிறுவனச் செயலாளர்.

5-713

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், 2015, ஏப்பிறல் 16 ஆந் திகதியன்று ஓர்கன்ட் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஓர்கன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 105123
பதிவு அலுவலகம் : இல. 216, டி சேரம் இடம், கொழும்பு 10

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

5-704

---

## அறிவித்தல்

ஒப்பொ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ஒப்பொ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி பீவீ 105048 எனும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும்

புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது இல. 20/1, அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு 3 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

கந்தையா நீலகண்டன்,
தலைவர்,
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட்
செக்கிரட்டரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 3.

5-712

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சிக்னேஜ் வேர்ல்ட் (பீவீரீ) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 105310
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, ஏப்பிறல் 28
பதிவு முகவரி : இல. 133/1, பாகொட வீதி, பிட்டகோட்டே

கம்பனிச் செயலாளர்.

5-715

---

## பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : த புக்செல்லர்ஸ் அன்ட் இம்போர்ட்டர்ஸ் அசோசியேஷன் ஒப் சிலோன்
பதிவிலக்கம் : ஜீஏ 2251
அலுவலக பதிவு முகவரி : இல. 23, எக்கநாயக்க வீதி, நுகேகொடை
கம்பனியின் புதிய பெயர் : சிலோன் புக்செல்லர்ஸ் இம்போர்ட்டர்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட்டர்ஸ் அசோசியேஷன்
பெயர் மாற்றம் பெற்ற திகதி : 2015.04.30

கோர்ப்பரேட் மெனேஜ்மென்ட் கன்சல்டன்ஸ்,
அன்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5-766

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி நிறுவப்பட்டது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : டெப்பா (தனி) வரையறுக்கப்பட்டது
பதிவு இலக்கம் : பீவீ 100116
அலுவலக முகவரி : இல. 596, நாரெனிய, மாவனல்லை
நிறுவப்பட்ட திகதி : 2014.08.06

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

5-701

---

## கம்பனி கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

நெட்பேர்ல் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனி 2011, ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதி கம்பனிகள் பதிவாளரினால் கூட்டிணைக்கப்பட்டது :-

பதிவு அலுவலகம் : இல. 63, 2/3, கண்டி வீதி, கிரிபத்கொடை
பதிவு இலக்கம் : பீவீ 81649
திகதி : 2015, மே 07

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

5-723

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கெவெரென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதவிலக்கம் : பீவீ 104205
கூட்டிணைப்புத் திகதி : 2015.04.06
கம்பனியின் பதிவு முகவரி : இல. 47, பீட்டர் மென்டிஸ் வீதி, நீர்கொழும்பு

லெய்சென்ஸ் ரேயிமன்ட்,
பணிப்பாளர்.

5-791

**அறிவித்தல்**

டினூா (பிறைவேட்) லிமிட்டெட்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

டினூா (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி பீவீ 104867 எனும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

கந்தையா நீலகண்டன்,
தலைவர்,
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட்
செக்கிரட்டரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 3.

5-711

## ஏல விற்பனைகள்

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ –
களுத்துறை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-*

**முதலாம் அட்டவணை**

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்ட முனை பாணந்துறை தல்பிட்டிபெத்த பாணந்துறை பிரதேச சபை கெசல்வத்தை கிளை அலுவலகத் தொகுதியில் கெசல்வத்தை கிராமத்தில் அமைந்துள்ள 'கொடபொரகாலந்த அல்லது தெல்கா வத்தை மற்றும் தெல்காவத்தை' காணியின் நிலஅளவையாளர் சீ. பி. குமாரகே அவர்களால் தயாரிக்கப்பட்ட 2001.01.05 ஆந் திகதிய வரைபட இலக்கம் 1185 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. ஏ.**

**காணியின் விஸ்தீரணம் :**

**இருபத்தொன்பது தசம் எட்டு ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 29.81பே.) அங்குள்ள கட்டிடம் மற்றும் அனைத்தும் சேர்த்து.**

**இரண்டாம் அட்டவணை**

**1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனை பாணந்துறை தல்பிட்டிபெத்த பாணந்துறை கெசல்வத்தை கிராமத்தில் அமைந்துள்ள 'புஹுஹெரலிய கஹவத்தை' காணியில் நிலஅளவையாளர் எச். டபிள்யூ. பெர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 1979.10.22 ஆந் திகதிய வரைபட இலக்கம் 372 இல் காட்டப்பட்ட காணித் துண்டு இல. 1எச் காணியின் பகுதிபடுத்திய காணித்துண்டு இல. 1 Ha.**

**காணியின் விஸ்தீரணம் : முப்பது பேர்ச் (0ஏ. 0றூ. 30பே.) அங்குள்ள கட்டிடம் மற்றும் அனைத்தும் சேர்த்து.**

**2. மேற்படி கெசல்வத்தை கிராமத்தில் அமைந்துள்ள 'புஹு ஹெரலியகஹவத்தை' காணியில் நிலஅளவையாளர் எஸ். லியனகே அவர்களால் தயாரிக்கப்பட்ட 1990.12.09 ஆந் திகதிய வரைபட இலக்கம் 1098 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 1எச்பி.**

**காணியின் விஸ்தீரணம் : பதினேழு தசம் ஒன்பது நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 17.94பே.) அங்குள்ள கட்டிடம் மற்றும் அனைத்தும் சேர்த்து.**

**மேற்படி கெசல்வத்தை கிராமத்தில் அமைந்துள்ள 'புஹுஹெரலிய கஹவத்தை' காணியில் நிலஅளவையாளர் எஸ். லியனகே அவர்களால் தயாரிக்கப்பட்ட 1990.12.09 ஆந் திகதிய வரைபட இலக்கம் 1098 இல் காட்டப் பட்ட காணித்துண்டு இல. 1எச்சீ (10 அடி றோட்).**

**காணியின் விஸ்தீரணம் : இரண்டு தசம் நான்கு ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 2.46பே.) .**

*(கடன் எடுத்த இலங்கை கம்பனி சட்டப்படி தாபிக்கப்பட்டு பாணந்துறை கெசல்வத்தை இல. 289/112 ஆம் பதிவு விலாசத்தில் அமைந்துள்ள ஏசியன் ட்ரேடிங் மற்றும் மார்க்கெட்டிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த ஜயந்த தெடிகம 1 ஆவது மற்றும் 2 ஆவது இடாப்புகளில் சொல்லப்பட்ட காணிகளை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளது.)*

இதன்கீழ் விபரிக்கப்பட்ட காணிகளை அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் என்னால் விற்பனை செய்யப்படும் :

(1) 1 ஆவது அட்டவணை காணித்துண்டு இல. ஏ (0ஏ. 0றூ. 29.81பே.) 2015, யூன் மாதம் 19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கும் (2015.06.19),

(2) 2 ஆவது அட்டவணை காணித்துண்டு இல. 1எச்ஏ (0ஏ. 0றூ. 30பே.), காணித்துண்டு இல. 1எச்பி (0ஏ. 0றூ. 17.94பே.) 2015, யூன் மாதம் 19 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கும் (2015.06.19) விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.12.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014.12.09 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2015.05.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2015.06.01 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம் (1 ஆம் அட்டவணை).**- கெசல்வத்தை சந்தியிலிருந்து (பாணந்துறை பக்கம் மொரட்டுவையிலிருந்து காலி றோட்டில் 3.5 கி. மீட்டர்) திக்கல பெரி றோட்டில் 1.4 கி. மீட்டர் சென்று இடதுபக்கம் திரும்பி டெம்பல் றோட்டில் 350 மீட்டர் சென்று மூன்று வளைவுகளைத் தாண்டி காணியை அடைய முடியும்.

**காணியைச் சென்றடையும் விதம் (2 ஆம் அட்டவணை).**- கெசல்வத்தை சந்தியில் (காலி றோட்டில் 3.5 கி. மீட்டர் மொரட்டுவையிலிருந்து பாணந்துறைப் பக்கம்) திக்கல பெரி றோட்டில் 1.7 கி. மீட்டர் சென்று இடதுபக்கம் திரும்பி காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- வெற்றி பெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது களுத்துறை கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- சிரேஷ்ட முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 302, காலி வீதி, களுத்துறை. தொலைபேசி இல. : 034-2221599, 034-2221600-2 ; தொலைநகல் இல. : 034-2221603.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

5-784

**ஹட்டன் நஷனல் வங்கி பி.எல்.சி. – கிருலப்பனை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள், கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ளதும் ஏர்னஸ்ட் டீ சில்வா மாவத்தை, வரிமதிப்பு இல. 11 ஐக் கொண்டதும் ''லுலுவேர்த் மற்றும் ஒலிம்பஸ்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். மெக் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1950, ஒகத்து மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 131 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. ஏ என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 36.4பே.)**

(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு யூ. எஸ். கே. ஹேரத் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012, திசெம்பர் 06 ந் திகதியிடப்பட்ட முறி இல. 4596, பிரசித்த நொத்தாரிசு எம். பி. எம். மொஹொட்டி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, சனவரி 8 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 3284 மற்றும் பிரசித்த நொத்தாரிசு என். எம். சீ. பீ. வெத்தசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2003, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 2108 மற்றும் 2005, நவெம்பர் 28 மற்றும் திசெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 2593 ஆகிய இரண்டும், அவற்றின் மீது ஈடுவைக்கப்பட்டு, அடைமானம் வைக்கப்பட்டு வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான மாலபே புரொப்பர்ட்டி டெவொலப்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஈடுவைத்தவரான கஹந்த கமகே தயா சாந்த கஹந்தசுமித்தர கருணாரத்ன ஆகியோருக்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கொழும்பு கோட்டையிலிருந்து லோட்டஸ் வீதி, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, குமரன் இரத்தினம் வீதியூடாக பயணித்து, ஸ்ரீ ஜினரதன மாவத்தை, சேர். ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் கொம்பனி வீதி சந்தியைக் கடந்து, ஏர்னஸ்ட் டீ சில்வா மாவத்தையில் ஒரு மைல் தூரம் தொடர்ந்து ஏறக்குறைய 75 யாரில் ஆனந்த குமாரசாமி மாவத்தையை (முன்னர் கிறீன் பாத் என அறியப்பட்டது) கடந்து மேல் மாகாண கல்வித் திணைக்கள அலுவலக வளவுகளின் தென் எல்லை வழியே ஜல்லி இடப்பட்ட தனியார் வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, பின்னர் சொல்லப்பட்ட ஒரு பக்கம் மட்டும் செல்லக்கூடிய தனியார் வீதியில் நேராக இருக்கின்ற தற்போது ஏர்னஸ்ட் டீ சில்வா மாவத்தை (முன்னர் பிளவர் வீதி என அறியப்பட்டது), வரிமதிப்பு இல. 11 ஐக் கொண்ட வளவை எதிர்கொள்ள இறுதியாக ஏறக்குறைய 40 யார் தூரம் செல்லவும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2015, யூன் 23 ஆந் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2015, ஏப்பிறல் 30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2015, மே 06 ஆந் திகதிய ''லக்பிம'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி மிரர்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2 (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (இருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆதனங்களையும் "கொழும்பு 10, டீ. பீ. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க. உதவிப் பொது முகாமையாளர், அறவீடுகள்", அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816, தொலைநகல் இல.: 011-2661835.

டல்லாஸ் கெலாட்ஸ்,
நிபுணத்துவம்பெற்ற உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர் மற்றும் ஆதன முகவர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-24302623.
தொலைநகல் இல. : 011-2856013.

5-798

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

ஜே. என். எல். ஜயதிலக்க - கணக்கு இல. 0021 5000 0710

2007, மாச்சு மாதம் 2 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2007.02.21 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்", "தினக்குரல்" பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2005, மாச்சு மாதம் 29 ஆந் திகதியன்று வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய மூன்று இலட்சத்து எழுபத்தாறாயிரத்து இருநூற்றுத்தொண்ணூற்று மூன்று ரூபா இருபத்திரண்டு சதம் (ரூ. 3,76,293.22) மற்றும் 2004, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மூன்று இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து எண்ணூற்றறுபது ரூபா (ரூ. 3,22,860) மீது ஆண்டுக்கு இருபத்துநான்கு சதவீதப்படியான (24%) வட்டி மற்றும் விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து) ஆகியவற்றை அறவிடுவதற்காக இங்கே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 2015.06.26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்த மத்திய பிரதேச செயலாளர் பிரிவில் நுவரகம கோரளையில் பந்துலகம இல. 293 என்ற கிராம அலுவலர் தொகுதியில் கொரகஹவெவ எனுமிடத்தில் அமைந்த பயிர்கள் மற்றும் சகலதுடன். மேற்கூறப்பட்ட துண்டின் எல்லைகளாவன- வடக்கு : பீ. ஹவடியவின் வயல்கள் ; கிழக்கு : கள்ஹேன இன் வயல்கள் ; தெற்கு : பீ. ஜயதிலகவின் மேட்டுக் காணி மற்றும் மேற்கு : ஹல்மில்லகுளம றோட் ஒதுக்கு என்பவையாகும். இந்தக் காணி இரண்டு ஏக்கர் (2ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி அநுராதபுரம் காணிப்பதிவகத்தில் எல்டிஓ 370/99 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

குழுமக் கம்பனிச் செயலாளர்.

5-786

---

## இலங்கை வங்கி

